செ.வெ.எண் : 02/ மே நாள் : 04.05.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

### இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இன்று (04.05.2021) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் நேரடியாகச் சென்று, மருத்துவமனையின் செயல்பாடு குறித்து திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் தற்போது 1227 நபர்களுக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். மாவட்டத்தில் இதுவரை மொத்தம் 70,689 க்கும் மேற்பட்ட நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

நோய்த்தொற்றால் பாதிக்கப்படுபவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக ஆக்சிஜன் வசதியுடன் கூடிய படுக்கைகள் இராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 600-ம், பரமக்குடி அரசு மருத்துவமனையில் 200-ம, முதுகுளத்தூர், கமுதி, கீழக்கரை உள்ளிட்ட மருத்துவமனைகளில் 200-ம் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 500-ம் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. என மொத்தம் 1,500 படுக்கைகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது இராமநாதபுரம் அரசு மருத்துவ மருத்துவக் கல்லூரிகளில் 1000 படுக்கை வசதிகளாக ஒரு வார காலத்திற்குள் மேம்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றில் 800 ஆக்சிஜன் வசதியுடன் கூடிய படுக்கை வசதிகளுடன் ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இதன் மூலம் மொத்தம் 1900 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்படும். இவற்றில் 1700 ஆக்சிஜன் படுக்கைகளாக ஏற்படுத்தப்படும். மேலும் கோவிட் கேர் சென்டர்கள் மூலம் சுமார் 2000 படுக்கை வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் பங்களிப்பு இல்லாமல் கொரோனா நோய்த்தொற்றை தடுக்க முடியாது. எனவே பொதுமக்கள் தமிழக அரசுடன் இணைந்து ஒத்துழைப்பு தரவேண்டும். பொது இடங்களுக்கு செல்லும் பொழுது அனைவரும் முக கவசம் அணிதல், சமூக இடைவெளியை பின்பற்றவும் மற்றும் கைகளை அடிக்கடி சுத்தம் செய்தல் போன்ற நடைமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும். பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை பாதிப்பு உள்ளவர்களுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை அளிக்கவும் மற்றும் ஆக்சிஜன் படுக்கை வசதிகள் தயார் நிலையில் உள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததார்.

இந்த ஆய்வின் போது, அரசு மருத்துவ கல்லூரி டீன் மரு.எம்.அல்லி மற்றும் மருத்துவமனை மருத்துவர்கள் மரு.மலையரசு, மரு.ஜவஹர், மரு.ஞானக்குமார் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**